அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:10/2015 (II)

எனதுஇல.CS/SLAS/AMEN/MINUT/(தொகுதி III)
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07
2016 மார்ச் மாதம் 31 ஆந் திகதி .

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்.

**<u>இலங்கை நிர்வாக சேவையின் 111 ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் தொடர்பான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் 11 ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் தொடர்பான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைவது தொடர்பாக சலுகை வழங்குதல்</u>**

இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான 2015.04.23 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2015/I இன் 02 ஆம் பந்தியின் தொடர் இலக்கம் 1 கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளமைக்கப்படுகின்றது.

02. **வினைத்திறன்காண் தடைப்பரீட்சை**

I. இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கு குறித்த வினைத்திறன்காண் தடைப் பரீட்சை உரிய வகையில் நடத்தப்படாமை காரணமாக ஏற்படும் நிர்வாக ரீதியான பிரச்சினைகள் சம்பந்தமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

i. இல.1842/2 மற்றும் 2013.12.23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புதிய இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளில் சித்தியடையும் பொருட்டு 6 பரீட்சைத் தவணைகளை வழங்குவதற்கும்,

ii. இல. 1419/3 மற்றும் 2005.11.14 ஆந் திகதிய இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பில் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கான 12 சந்தர்ப்பங்களை சலுகையாக வழங்குவதற்கும்,

iii. இல. 1419/3 மற்றும் 2005.11.14 ஆந் திகதிய இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்படுள்ள முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கான 06 சந்தர்ப்பங்களை சலுகையாக வழங்குவதற்கும்,

அலுவலரின் நியமனம் அல்லது தரமுயர்வுத் திகதியில் இருந்து நடாத்தப்பட்ட பரீட்சைத் தவணைகள் / சந்தர்ப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய இச் சலுகை உரியதாகும்.

02. இச் சுற்றறிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.



ஜே. தடல்லகே
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு